Annual Subscription Rs. 80/-
Price Rs. 7/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 6 ஜூன் 2009




## கிறிஸ்துவின் சபை

**காங்கயம் - 638 701**
**தமிழ்நாடு, இந்தியா.**

© 04257 - 230030, 230603 ;98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net

# உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் வேண்டும்

கடந்த 15,16 ஆண்டுகளாக திருமறை ஆசான் மாத இதழில் வெளிவந்த என்னுடைய ஆசிரியர் உரைகளைத் தொகுத்து, 2 (அ) 3 நூல்களாக வெளியிட விரும்புகிறேன். அதற்கு முன்பாக, வாசகர்களாகிய உங்களுக்கு இது எந்தளவு பயனுள்ளதாக இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்விலக்கியப்பணிக்கு, பரலோக தேவனுடைய தயவோடு, உங்களது ஆலோசனைகளும், ஊக்கமும், பொருளாதார ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

ஆகையால், தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும், சபையாகவும் நீங்கள் எப்படிப் பங்களிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, இப்பணியைத் தாங்குமாறு ஜெபத்தோடு வேண்டுகிறேன்.

உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கும்,

ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நீங்கள் இரட்சிப்படைய வேண்டும் ........ 9
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 16
5. சிறுவர் பகுதி ........ 20
6. இரத்த சாட்சிகள் ........ 22
7. தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் ........ 26
8. இயேசுவைக் காண விரும்புகிறோம் ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 JUNE - 2009 Issue - 6


ஆசிரியர் உரை

## தேவனுக்குப் பாத்திரராய் நடக்க வேண்டும்

"பாத்திரம்" அல்லது "அபாத்திரம்" ஆகிய இந்த இரண்டு வார்த்தைகளுக்குமான பொருள் அநேகராகிய நமக்குத் தெரியும். முதலாவது, வார்த்தைக்குத் "தகுதி" என்றும், இரண்டாவது வார்த்தைக்கு "தகுதியின்மை" என்றும் பொருள் படும். இப்பொரு ளை அறிந்து பூமியில் வாழும் கிட்டத்தட்ட அனைவரும் தங்கள் வாழ்க்கையில் யாருக்குப் பாத்திரமாக வாழ வேண்டுமென்பதில் தெளிவற்றவர்களாகவே உள்ளனர். சொல்லப்போனால் பெரிய மனிதர்களுக்கும், செல்வாக்குள்ள வர்களுக்கும், அதிகாரத்தி லுள்ளவர்களுக்கும் பாத்திரமாக வாழ வேண்டுமென்றே முயற்சிக்கிறார்கள். ஆனால், தன்னையும், தான் காணும் அண்டசராசரங்களையும் படைத்து, ஆண்டு வழி நடத்தி வரும் சர்வவல்லவருக்குப் பாத்திரமாக நடக்க வேண்டு மென்பதில் தேவை யான அளவுக்கு அக்கறை காட்டுவதில்லை.

ஆனால், அப்போஸ்தலர் பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதும் போது, அவர்களை அன்று சரீரப்பிரகாரமாக ஆண்டு கொண்டிருந்த இராயன் உட்பட யாருக்கும் பாத்திரராக நடக்கா மல், தேவனுக்குப் பாத்திரமாய் நடவுங்கள் என்று ஆவியானவ ரின் ஏவுதலால் அறிவுரை கூறியுள்ளார். மனிதர்களுக்குப் பாத்திர மாய் நடப்பது குறித்து ஒருபோதும் கவலைப்படாதீர்கள் என்பதே இதன் பொருள். தேவனுக்கு மாத்திரம் பாத்திரமாய் நடக்க வேண்டு மென்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில், பிரதானமானது, யோவான் 3:16 ல் உள்ளது. மனிதர்கள் ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்படும்படியாய், தம்முடைய ஒரே பேறான குமாரனை இப்பூமிக்கு அனுப்பிக் கொடுத்தவர் தேவாதி தேவன். இது ஒன்று போதும், பரலோகத்தின் தேவனுக்கு மனிதன் என்றென்றும் பாத்திரமாய் நடக்க வேண்டுமென்பதற்கு.

சரி, பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு இவ்வார்த்தை களை எந்தப் பின்னணியில் எழுதினார் என்று நமது வழக்கத்தின் படியாக தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

பரிசுத்த வேதாகமத்தின் காரியங்களை ஓரளவுக்காகிலும் அறிந்திருப்பவர்களுக்குப் பவுலடியார் மூன்று நற்செய்திப் பயணங்களை முழு மூச்சாக மேற்கொண்டார் என்பது தெரியும். முதல் பயணத்தைப் போன்றே இரண்டாவது பயணத்தையும் அந்தியோகியாவிலிருந்தே ஆரம்பித்தார். அங்கிருந்து மேல் நோக்கிப் பயணத்தைத் தொடங்கியவர், தர்சு, இக்கோனியா, துரோவா, நெயோப்போலி, பிலிப்பி ஆகிய பட்டணங்களின் வழியாக அம்பிப்போலி பட்டணத்துக்கும், அங்கிருந்து அப்பொ லோனியா வழியாக, மகா அலெக்சாண்டரின் சகோதரியாகிய "தெசலோனிக்கேயாள்" என்பவளின் பெயரால் அழைக்கப்பட்ட தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தாள். இவளுடைய கணவ னாகிய "கசண்டர்" என்ற தளபதியின் தலைமையில் இப்பட்ட ணம் கி.மு.315 ல் பிடிக்கப்பட்ட போது, தன் மனைவியின் பெயரையே அதற்குச் சூட்டிவிட்டான். பிறகு ரோம அரசாட்சிக் காலத்தில், இப்பட்டணம் மக்கெதோனியா பகுதியின் தலைநகர மாகத் திகழ்ந்தது. இது ஒரு துறைமுகப்பட்டணமாகவும், மிக முக்கியமான நெடுஞ்சாலை வழியாகவும், அத்தோடு தன்னாட்சி பெற்ற சுதந்திர நகரமாகவும் இருந்தபடியால் ரோமப் பேரரசின் பெரு நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. பவுலடியார், தன் நற்செய்திப் பயணத்தில் அங்கு சென்ற போது, இதன் மக்கள் தொகை சுமார் 2 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. நாம் வாழும் இந்த நாட்களிலும் இந்நகரம் இருக்கிறது. ஆனால், "சலோனிக்கே" என்ற பெயரில் அழைக்கப்பட்டு, துருக்கி நாட்டில், சுமார் 1 லட்சம் மக்கள் தொகை கொண்டதாக உள்ளது. இன்றைக்கும் சுமார் 25,000 யூதர்கள் இப்பட்டணத்தில் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட பட்டணத்துக்குத்தான் பவுலடியார் கிறிஸ்து வின் நற்செய்தியைச் சுமந்து வந்தார். கணிசமான மக்கள் தொகையோடிருந்த யூதர்களுக்கு அங்கொரு ஜெப ஆலயம் இருந்தது. செல்லுமிடமெங்கும் ஜெப ஆலயம் இருந்தால், அங்கு சென்று பிரசங்கிப்பது பவுலுக்கு வழக்கம். ஆக, தனது வழக்கப் படி மூன்று ஓய்வு நாட்களில், வேத வாக்கியங்களின் நியாயங் களை எடுத்துக் கூறியுள்ளார். அச்செய்தியில், தான் அப்போஸ் தலனாக அழைக்கப்பட்ட அந்த அற்புத சம்பவம் பற்றியோ, அவர் மேற்கொண்ட பிரயாணத்தின் அனுபவம் பற்றியோ பவுல் பேசவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஆகியவை பற்றியே பேசியுள்ளார். இச்செய்தி யினடிப்படையில், இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப் படுத்தியுள்ளார் (அப் 17:1 3). ஆனால், இன்றைய பிரசங்க செய்திகள் எதை மையமாகக் கொண்டுள்ளது? கிறிஸ்து வின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இவைகளுக் குத் தான் முக்கியத்துவம் தரப்படுகிறதா?

பவுலின், வல்லமை நிறைந்த இந்தச் செய்திக்கு யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளமான ஜனங்களும், கனம்

பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் கீழ்ப்படிந்தார்கள் (17:4). ஆனால், விசுவாசியாத யூதர்களால் பிரச்சினை வந்தது. ஆம், அவர்கள் வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு, பவுலுக்கும் அடைக்கலம் கொடுத்த யாசோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அமளியுண்டாக்கி, "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்' என்று அலறித் துடித்து, அதிகாரிகளிடத்தில் எப்பொழுதும் போல பொய்க் குற்ற மும் சாட்டினார்கள் (5,7). அதன் பிறகு, யாசோனின் ஜாமீன் மூலமாகப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வந்து, இரவோடு இரவாக, பவுலையும், சீலாவையும் பக்கத்துப் பட்டணமாகிய பெரோயா வுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இப்படியொரு அவல நிலையில், அவசர கோலத்தில் அவர் வெளியேற்றப்பட்டிருந்தாலும் தெசலோனிக்கே கிறிஸ்தவர் களோடு அவர் கொண்டிருந்த நெருக்கத்தில் எந்தக் குறையும் இருக்கவில்லை. அவர்களோடு அவர் கொண்டிருந்த சத்தியத்தின் உறவை நிருபத்தின் ஒவ்வொரு வரியிலும் நாம் காண முடியும். இந்நிருபத்தை அவர் எழுதினபோது, அந்தச் சபை ஆரம்பிக்கப் பட்டு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தான் ஆன இளம் நிலையிலேயே இருந்தது. ஆனால், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியோ அபாரமாக இருந்தது. அதுகண்டு ஆத்தாத்துப் போன நிலையில், பவுலடியார் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சி யை, ஆவியானவரின் துணை கொண்டு மெச்சியிருக்கிறார். "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத் தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்த ரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியா விலும், அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரி களானீர்கள்" (1 தெச 1:6,7) என்று.

இந்நிருபத்தை எழுதுவதற்கு, பவுலடியாருக்குக் குறைந்தது இரண்டு நோக்கங்கள் இருந்திருக்க வாய்ப்புண்டு.

1. தெசலோனிக்கேயரை விசுவாசத்தில் மேலும் பெலப்ப டுத்துவது.

2. இரண்டாம் வருகை பற்றிய அவர்களது ஐயப்பாட்டைப் போக்குவது. இந்த இரண்டு காரியங்களைக் குறித்தும் எழுதுவது அவசியமென்று, இவர்களை விசாரித்து வரும்படி அனுப்பப் பட்ட தீமோத்தேயு கொண்டு வந்த செய்தியினடிப்படையில் தெரிந்து கொண்டார்.

சரி, இந்நிருபத்தின், இரண்டாம் அதிகாரம் 11,12 ஆகிய வசனங்களில் தான், "மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும், மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திர ராய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர் கள் (1 தெச 2:11,12) என்று கூறியுள்ளார். இங்கே, தெசலோனிக்கேயர் தேவனுக்குப் பாத்திரராய் நடக்க மூன்று வித்தியாச மான வார்த்தைகளைப் பவுலடியார் பயன்படுத்தி, அவர்களைச் செயல்பட வைத்திருக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

புத்தி, தேறுதல், எச்சரிப்பு ஆகிய இம்மூன்று வார்த்தை களும் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குப் பாத்திரமாய் நடக்க நமக்கும் அவசியமாயிருப்பதால், இவ்வார்த்தைகளின் விளக்கத் தை இங்கே தனித்தனியாகப் பார்ப்போம்.

## I. தெசலோனியருக்கு "புத்தி" சொன்னோம்

தேவனுக்குப் பாத்திரவான்களாய் தெசலோனிக்கேயர் நடப்பதற்கு, அவர்களுக்குத் தேவையான முதலாவது ஆலோ சனையாக ஆவியானவரின் துணையோடு கருதியது பவுலடியார் "புத்தி".

புத்தியைக் குறித்து வேதாகமம் மிகவும் உயர்வாகவும், ஞானத்திற்கு இணையாகவும் பேசுகிறது. "ஞானத்தைக் கண்ட டைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கிய வான்கள்" என்று (நீதி 3:13). கர்த்தர் இந்த இரண்டையும் கொண்டு தான் பூமியை அஸ்திபாரப்படுத்தி, வானங்களை ஸ்தாபித்தார் என்று ஞானி சாலமோன் வெளிப்படுத்தியுள்ளார். (நீதி.3:19) "ஞானம்" என்பது அறிவு சார்ந்தது. "புத்தி" என்பது அந்த அறிவைச் செயல்படுத்துவதைச் சார்ந்தது. ஆம், பொது வாக ஒருவன், செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய அளவில் செய்யாமல் இருக்கும்போதும், செய்யக் கூடாததை தேவை யில்லாமல் செய்யும் போதும் "புத்தி இருக்கிறதா" என்று கேட்பதுண்டு. மேலும், ஒருவன் செய்ய வேண்டியதைச் சிறப்பா கச் செய்வதற்கும் புத்தி சொல்லப்படுவதுமுண்டு. இங்கே பவுலடி யார், நன்றாக ஆரம்பம் பண்ணின தெசலோனிக்கேயர், மேலும் ஆவியில் பலப்படவும், மேம்படவும் புத்தி சொல்லியுள்ளார்.

அதுவும் தகப்பனைப் போன்று புத்தி சொல்லியுள்ளார். தெசலோனிக்கேயரைப் பொறுத்தளவில் பவுலடியார் ஒரு தகப்பன் தான். ஆவிக்குரிய ரீதியில் அவர்தான் இவர்களைப் பெற்றெடுத்தார். ஒரு சரீரப் பிரகாரமான தகப்பன் தன் பிள்ளை களுக்குப் பல வகைகளில் புத்தி சொல்லுவார். அவைகளுள் ஒரு வகை தான் வாழ்க்கையில் அனுபவித்த காரியங்களைக் கொண்டு சொல்லுதல். அந்த அடிப்படையில் பார்த்தால், தான் தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவால் சந்திக்கப்பட்ட நாளி லிருந்து (அப். 9 அதி) அவர்களோடு தங்கியிருந்த நாட்கள் வரையிலுமான தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் அனுப வங்களை வைத்துப் புத்தி சொல்லியிருப்பார். அப்படித்தானே! இவைகளையெல்லாம் அந்த உன்னத புருஷனிடமிருந்து நேரிலே கேட்பதற்கு இந்தத் தெசலோனிக்கேயர் எவ்வளவு பேரு பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் பாருங்களேன்!.

தான் இரட்சிக்கப்பட்ட விதம் குறித்தும், தான் எதிர் கொண்ட சோதனைகள் பற்றியும், அவைகளை மேற்கொள்ளும் பெலனை தான் பெற்றுக்கொண்ட விதம் பற்றியும், கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றிக்கான இரகசியம் குறித்தும் விவரித்துப்புத்தி சொல்லியி ருப்பார். "இப்படியாகச் செல்லுமிடமெங்கும் புத்தி சொல்லுவது, பவுலுக்கு வழக்கமாகவும் இருந்துள்ளது. "அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கின பின்பு, லீஸ்திராவுக்கும், இக்கோனி யாவிற்கும், அந்தியோகி

யாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாகத் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்" (அப் 14:22)

தேவனுக்கடுத்த காரியத்திலும், பக்தி வாழ்விலும் புத்தி சொல்லுவது எவ்வளவு முக்கியமானதென்பதை எபிரெய ஆசிரியரைக் கொண்டு ஆவியானவர் சொல்லுவதைக் கவனியுங்கள். "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையி னாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமள வும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (எபி 3:13).

அப்படியானால், அருமையானவர்களே, தேவனுக்குப் பாத்திரராக நடக்கிற காரியத்தில் நம்முடைய காரியங்கள் எப்படியுள்ளது? நாம், பவுலடியாரைப் போன்று மற்றவர்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களாகவும், எபிரெயர் ஆசிரியர் கூறுவதுபோல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுகிறவர்களாகவும் உள்ளோ மா? இந்தக் காரியத்தில் நாம் செய்ய வேண்டியதைச் செய்கிற வர்களாயிருப்போமாக!

## II. தெசலோனிக்கேயருக்கு "தேறுதல்" சொன்னோம்.

தேவனுக்குப் பாத்திரவான்களாய் தெசலோனிக்கேயர் நடப்பதற்கு, அவர்களுக்குத் தேவையான இரண்டாவது ஆலோசனையாக ஆவியானவரின் துணையோடு பவுலடியார் கருதியது "தேறுதல்".

தேறுதல், ஆறுதல் ஆகிய இரண்டும் ஒரே பொருளைக் கொடுக்கக் கூடிய இரண்டு வார்த்தைகள். இந்த ஆறுதலும், தேறுதலும் தேவனுடைய குணங்களில் ஒன்றாக இருக்கிறதென்று பல வேத வசனப்பகுதிகள் நமக்குச் சொல்லுகிறது. இதே பவு லடியார், ரோமாபுரியாருக்கு எழுதும் போது, ....பொறுமை யையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதா வும், சகல விதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம் என்பதோடு, அடுத்த வசனத்தில், தேவனால் எங்க ளுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலா கிலும் அகப்படுகிறவர்களுக்கு, நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திர வங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்றும் கூறப்பட்டுள்ளது (2 கொரி 1:4). இது தவிர, இன்னும் பல வசனப்பகுதிகள் இக்கருத்துக்கு வலுசேர்ப்பதாக உள்ளது.

தேவனுக்குச் சொந்தமான இந்தக் குணத்தைப் பவுலடியார் கிறிஸ்துவின் உபதேசத்திலிருந்து சுதந்தரித்துக் கொண்டு, தன் சரீரப் பிரகாரமான வாழ்க்கையில் கணவன், தகப்பன் என்று அந்தஸ்தைப் பெறாதவராக இருந்தாலும், ஒரு தகப்பனுடைய தன்மையைப் பெற்றவராக அவர்களை ஆறுதல் படுத்தியுள்ளார். பொதுவாக யாருக்கு ஆறுதல் தேவைப்படும்? உபத்திரவப்படு கிறவர்களுக்குத் தான் ஆறுதல் தேவைப்படும். அப்படியானால், தெசலோனிக்கேயர் சத்தியத்தினிமித்தம், சுவிசேஷத்தினிமித்தம் உபத்திரவப்பட்டவர்

களாகவும், படுகிறவர்களாகவும் இருந்தார் களா? ஆம், இதிலே யாருக்கும் எந்தச் சந்தேகமும் தேவை யில்லை.

தெசலோனிக்கேயர், முதன் முதலாக சத்தியத்தை ஏற்றுக் கொண்டதே உபத்திரவங்களுக்கு மத்தியில் தான். எப்படி யெனில், நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களை யும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி..... (1தெச 1:6) என்று கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். மேலும், 1 தெச 1:14ம் வசனம், "எப்படியெனில், சகோதரரே யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்களும் பின் பற்றுகிறவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடு பட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள் என்று கூறுகிறது. இன்னும், நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்த போது உங்களுக்கு முன்னறிவித்தோம். அப்படியே வந்து நேரிட்ட தென்றும் அறிந்தி ருக்கிறீர்கள்" (1தெச 3:4) என்கிறார்.

பவுலடியார் கிறிஸ்துவினிமித்தமாகவும், கிறிஸ்துவின் சபை யினிமித்தமாகவும் பட்ட உபத்திரவங்கள் பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அது குறித்து ஒரு நீண்ட பட்டியல் 2கொரி 11:23-28 வசனப்பகுதியில் இடம் பெற்றுள் ளது. இப்படி ஏராளமான உபத்திரவங்களை அனுபவித்த பவுலடி யார், அவர்களுடைய உபத்திரவங்களில் அவர்களை ஒரு தகப்ப னைப் போன்று ஆறுதல் படுத்தியுள்ளார். ஆறுதல் படுத்திய தோடு நிற்காமல், உபத்திரவம் சம்பந்தமாக தெசலோனிக் கேயருக்குத் தேவையான ஒரு முக்கியமான உபதேசத்தையும், பயிற்சியையும் கொடுத்துள்ளார். ஆம், அது, கிறிஸ்தவ வாழ்க்கையில் உபத்திரவம் வரும்போது ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருக்க வேண்டுமென்று போதித்துள்ளார். இதை நாம் 1 தெச 5:11-லிருந்து அறிந்து கொள்ள முடியும். "ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்".

அருமையானவர்களே, பவுலடியார், அன்றைக்குத் தெசலோனிக்கேயர் மத்தியிலே இருந்தபோது, அவர்களுக்கு நேர்ந்த உபத்திரவத்திலும், அவர்களுக்கு நேரும் என்று எண்ணிய உபத்திரவங்களிலும் ஆறுதல் சொன்னது போல், இன்றைக்கு சபைகளில் இருக்கும் மூப்பர்களும், ஊழியர்களும், முன்னோடிகளும் விசுவாசிகளுக்கு ஆறுதல் கொடுக்கிறார்களா? அப்படியெல்லாம் யாரும் செய்வதில்லை என்று சொல்லி வழி நடத்து பவர்களைக் குற்றவாளிகளாகப் பார்ப்பதை உடனே நிறுத்திவிட்டு, தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்கள், ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருந்தது போல நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருக்கிறோமா என்று ஆத்தும பரிசோதனை செய்து பார்ப்போம். இப்படிச் செய்வது அதிக நன்மையானதாக இருக்கும்.

நாம் ஒவ்வொருவரும், தேவனுக்குப் பாத்திரமாய் நடப்பதற்கு இப்படியாக ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிப்பது அவசியமாயி

ருக்கிறது. இந்த உபதேசத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்து, நாம் தேவனுக்குப் பாத்திரமான வர்களாக மாற எல்லா முயற்சிகளையும் எடுப்போமாக!.

## III. தெசலோனிக்கேயருக்கு "எச்சரிப்பு" செய்தோம்

தேவனுக்குப் பாத்திரவான்களாய் தெசலோனிக்கேயர் நடப்பதற்கு, அவர்களுக்குத் தேவையான இன்னுமொரு ஆலோசனையாக ஆவியானவரின் துணையோடு பவுலடியார் கருதியது "எச்சரிப்பு".

பொதுவாகவே மனித வாழ்க்கைக்கு எச்சரிப்பு அவசியமானது. ஏனெனில், எச்சரிப்பு இல்லையென்றால், மனிதன் பல அபாயங்களில் சிக்கிக் கொள்ளுவான். சரீரப்பிரகாரமான வாழ்க்கைக்கான இந்த உண்மை ஆவிக்குரிய வாழ்வுக்கும் அப்படியே பொருந்துகிறதாக உள்ளது.

மனிதனுடைய பாதுகாப்பை எப்பொழுதும் விரும்பும் பரலோக தேவன் எச்சரிக்கிறவராகவே உள்ளார். "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத் தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்...." (எபி. 11:7) என்று வாசிக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் தேவனுடைய தீர்க்கதரிசிகள் எச்சரிக் கும் வேலையை கனகச்சிதமாகச் செய்துள்ளார்கள் (எசே 3:17-27) தேவனும், அவருடைய வாயாகக் கருதப்பட்ட தீர்க்க தரிசிகளும் மாத்திரம் நம்மை எச்சரிக்கின்றவர்களாக இராமல், தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளும் நம்மை எச்சரிக்கிறதாக இருக்கிறது. "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக் கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளித் தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் அவைகளைக் கைக் கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு" (சங் 19:10,11).

இப்படி தேவனும் தேவனுடைய தீர்க்கதரிசிகளும், தேவனுடைய வார்த்தைகளும் எச்சரிக்கிறதாக இருந்தாலும், எல்லோரும் எச்சரிப்புக்கு ஒரே விதமாகச் செவி கொடுப்ப தில்லை. எச்சரிப்பை அலட்சியம் செய்தவர்களும் உண்டு. நோவாவும், அவன் குடும்பமும் தேவ எச்சரிப்பை ஏற்றுச் செயல்பட்ட போது, எஞ்சியுள்ளவர்கள் தேவ எச்சரிப்பை அலட்சியம் செய்தார்கள். விளைவு? அழிவு. சவுலின் படைத் தளபதியாகிய அப்னேர், கலைமான்களில் ஒன்றைப்போல் ஓடக் கூடிய ஆசகேல் தன்னைத் துரத்திக் கொண்டு வருகிறதைக் கண்டு, என்னை விட்டு விலகிப்போ என்று எச்சரித்தான். ஆனால், அவன் எச்சரிப்பைப் புறக்கணித்தான். ஈட்டியினால் குத்தப்பட்டு மரித்தான் இங்கேயும், விளைவு? அழிவு (2 சாமு 2:18-23). ஒருசமயம் இஸ்ரவேல் ஜனங்கள், ....கர்த்தர் உனக்கு வாக்குத்தத்தம் பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத் துணிந்தார்கள். மோசே

அவர்களை நோக்கி; நீங்கள் இப்படிக் கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப் போகாதிருங்கள், கர்த்தர் உங்கள் நடுவில் இரார் என்றான். ஜனங்கள் எச்சரிப்பை எதிர்த்து ஏறத் துணிந்ததினால் துரத்தியடிக்கப்பட்டார்கள் (எண் 14:40-45).

ஆனால், நினிவே பட்டணத்து மக்கள், யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு எச்சரிப்படைந்து கீழ்ப்படிந்து அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள் (யோனா 3:1-10) இதிலிருந்து என்ன தெரிகிறது? தேவ எச்சரிப்பை எல்லோரும் ஒரே விதமாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், இந்த தெசலோனிக்கே பட்டணத்து மக்கள் பவுலின் மூலமான தேவ எச்சரிப்பை சரியான கோணத்தில் எடுத்திருக்கிறார்கள். ஆகவே தான் அவர்களுடைய விசுவாசம், மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரியாயிருந்த தோடு, எங்கும் பிரசித்தமாகவும் இருந்துள்ளது (1தெச 1:7,8).

அருமையானவர்களே, நம்முடைய பக்தி வாழ்க்கைக்காக நமக்கு எச்சரிப்பு கொடுக்கப்படும்போது அதை நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம்? நோவா காலத்து மக்கள் போலும், ஆசகேல் போலும் எச்சரிப்பை அலட்சியப்படுத்துகிறோமா?

அல்லது இஸ்ரவேல் ஜனங்களைப் போல எச்சரிப்பை எதிர்க்கிறவர்களாக உள்ளோமா? அல்லது நினிவே பட்டணத்தார் போன்றும், நோவா போன்றும் தேவ எச்சரிப்பை ஏற்றுச் செயல் படுகிறவர்களாக உள்ளோமா? இக்கேள்வி களுக்குத் திட்டமான பதில் நமக்குத் தேவை. மழுப்புவோ மானால் பக்தி வாழ்வில் மடிந்து போவோம்.

அருமையானவர்களே, மார்ஸ் மேடைப் பிரசங்கத்தின் மூலம் நமக்குக் கொடுக்கப்படும் ஓர் எச்சரிப்பைக் கவனியுங் கள். “அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்” (அப். 17:30) தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் விரோதமான எலலாக் காரியங்களிலிருந்தும் நாம் விடுபட வேண்டுமென்பதே இதன் பொருள். தேவாதி தேவன் இதை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். தேவனுக்குப் பாத்திரராக நாம் வாழ வேண்டுமானால், இந்த எச்சரிப்புக்கு நாம் கீழ்ப்படிவது அவசியம்.

நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குப் பாத்திரராக வாழ வேண்டுமென்று தேவன் விரும்புகிறபடியால், தெசலோனிக் கேயருக்கு வெளிப்படுத்தின ஆலோசனையை இம்மாதம் நமக்குத் தந்துள்ளார். ஆகவே, இவைகளை ஏற்று நாம் ஒவ்வொருவரும் செயல்பட பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

# நீங்கள் இரட்சிப்படைய வேண்டும்

இப்பாடத்தில், நீங்கள் இரட்சிப்படைய வேண்டும் என்பது குறித்து பார்க்க உள்ளோம். ஒருவேளை நீங்கள் ஏற்கனவே இரட்சிப்படைந்தவராக இருப்பின், உங்களோடு நான் பேச வில்லை. இன்றைக்கு அநேகர் தங்களை கிறிஸ்தவரென்று எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால், உண்மை நிலை அதற்கு மாறாக இருக்கும். அவர்களுக்கு கிறிஸ்து தேவனுடைய குமார னென்று போதிக்கப்பட்டிருக்கும். அவர்களும் அதை விசுவாசித் திருப்பர். பிறகு அந்த விசுவாசத்தினடிப்படையில் அவர்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக சொல்லப்பட்டிருக்கும். இன்னும் அநேகருக்கு, வேறு ஏதாவது போதிக்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் கர்த்தருக்கு ஏற்புடையவர்களானார்கள் எனச் சொல்லப்பட்டி ருக்கும்.

ஆனால், இந்தப் பாடத்தில், ஒருவன் இரட்சிப்பைப் பெற் றுக் கொள்வதற்கு, வேதாகமத்தின் அடிப்படையில், ஒருவன் என்ன செய்யவேண்டுமெனக் காட்டமுடியுமென்று நம்புகிறோம். அதைத் தெளிவாகக் கற்றுக் கொண்டவுடன், நீங்கள் இரட்சிக் கப்பட்டு விட்டீர்களா அல்லது இல்லையா என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும். நீங்கள் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று வெறுமனே நம்பி, ஒருவேளை வேத வாக்கியங்களினடிப் படையில் இரட்சிக்கப்படாமலிருந்தால், நீங்கள் கற்றுக் கொண்ட சத்தியத்தினடிப்படையில் செயல்பட்டு உங்கள் இரட்சிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமளவுக்கு, நீங்கள் உங்களோடும், தேவ னோடும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுகிறேன்.

பாவமில்லாத நிலையில்தான், எல்லாரும் பூமியில் பிறக்கி றார்கள். ஒவ்வொருவரும், தங்கள் வாழ்வின், முதல் சில வருடங்களுக்கு, தங்கள் செயல்களுக்குப் பொறுப்பாளியாக்கப் படுவதில்லை. நம்முடைய தேசத்தின் சட்டங்கள் கூட நன்மை தீமை அறியாத அந்த கால கட்டத்திலான தவறுகளுக்கு தண்ட னை தராது. ஆனால், நன்மை தீமை அறியத்தக்க நிலை வந்த போது தேவனுடைய பார்வையில் அவர்கள் பாவிகளாகிறார்கள். பாவம் என்பதற்கு "குறிதப்புதல்" அல்லது "சட்டத்தை மீறுதல்" என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. (1 யோவா3:4) ஒரு முறை ஒருவன் பாவியாகிவிட்டதால், அவன் இழந்து போகிறான். அப்பொழுது, அவன் பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட வேண் டும் அல்லது இரட்சிப்படைய வேண்டும். ஒருவனுடைய நீதியோ அல்லது நற்தன்மையோ அவனை இரட்சிக்காது என்பதை ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். (எபே.2:8,9) ஏற்கனவே, நாம் குறிப்பிட்டுள்ளது போல் தேவ நம்பிக்கையுள்ளவர்களே

கூட இழந்துபோக வாய்ப்புண்டு. ஒருவன் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடுவதும், கர்த்தருடைய நாமத்தினாலே மகத்தான காரியங்களைச் செய்வதும், இரட்சிக்கப்படுவதற்கு போதுமான தல்ல என்று கிறிஸ்து கூறியுள்ளார். (மத்.7:21 23) இறுதியாக, ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பாவ மன்னிப்புப் பெற்றிருந் தாலும், இரட்சிப்பில் நிலைத்திருக்க, இறுதிவரை உண்மையா யிருக்க வேண்டும். (வெளி. 2:10) வேறுவிதமாகச் சொன்னால், ஒருவன் விழுந்து போவதற்கும், பாவத்திற்குத் திரும்புவதற்கும், அதன் மூலம் மீண்டும் இழந்து போவதற்கும் வாய்ப்புண்டு.

உங்களை தனிப்பட்ட முறையில் நான் அறியாததினால், உங்களுடைய சூழ்நிலை எனக்கு தெரியாது. அதாவது, நீங்கள் தேவனுடைய பிள்ளையா என்பதும், நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமா என்பதும் தெரியாது. ஆனால், ஆவிக்குரிய ரீதியில் உங்களின் தற்போதைய நிலை என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள உங்களுக்கு உதவ முடியும் என எண்ணுகிறேன்.

உதாரணமாக, நீங்கள், இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவில்லையானால், அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. கிறிஸ்துதாமே இவ்வாறு கூறி யுள்ளார். "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேரான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவா 3:18) மீண்டும் கிறிஸ்து இவ்வாறு கூறியுள்ளார். "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங் களிலே சாவீர்கள் என்றார்." (யோவா8:24) விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது என்றாலும் இயேசு கிறிஸ்து தேவனு டைய குமாரனென்று விசுவாசியாதவரை, அவன் கர்த்தருக்குச் சொந்தமாக முடியாது. இதன் பொருள் என்னவெனில், ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனாகி, பிறகு, இரட்சிக்கப்படும் படி கர்த்தருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

அடுத்து, ஒருவன், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தும், தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, திரு முழுக்குப் பெறவில்லையானால், அவன் இரட்சிக்கப்பட வில்லை என்றுதான் பொருள். மனந்திரும்புங்கள் இல்லா விட்டால் அழிவீர்கள் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார். அதா வது ஒருவன் இரட்சிப்படையும்படியாய் தன்னுடைய பாவங்க ளிலிருந்து விலக வேண்டும். (லூக்.13:3) வேறொரு சந்தர்ப் பத்தில் பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக தன்னை அறிக்கை செய்ய வேண்டுமென்று கிறிஸ்து கூறியுள்ளார். "நீதி

யுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும்" (ரோம 10:10) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்.16:16) என்றும் கிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பொழுது இவைகளின் பொருள் என்ன? அதாவது ஒருவன், தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமெனில், அவன் முதலாவது, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். அவன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். அடுத்தபடியாக அவன் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் அல்லது பாவமன்னிப்புக்காக தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும். ஒருவன் இதன்படி செய்யாவிட்டால் அவன் இன்னும் இழந்து போனவனாகவே இருப்பான்.

மேற்சொன்னவைகளின்படி ஒருவன் செய்திருந்தாலும், அவன் கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபையில் அங்கத்தினராயிராவிட்டால் அவன் இரட்சிக்கப்படவில்லை. ஒருவேளை, பல பிரிவினைச் சபைகளில் அவன் அங்கமாக இருக்கலாம். ஆனால், இன்னும் சரியான சபையில் அவன் அங்கத்தினனல்ல. பரலோகம் செல்வதற்கு ஒரு குறிப்பிட்ட சபையில் அங்கமாக இருக்கத் தேவையில்லையென்று வாதிடுவோர் உண்டு. ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கு வேதாகமத்தின் போதனை தெரியவில்லையென்பதே உண்மை. ஒருவன் இரட்சிக்கப்பட்டு, எந்தவொரு பிரிவினைச் சபையிலும் அல்லது மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட சபையிலும், அங்கத்தினராக இல்லாமல், பரலோகம் செல்ல முடியுமென்பது உண்மை. ஆனால் இரட்சிப்படைந்து கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இல்லாமல் ஒருவன் பரலோகம் செல்ல முடியாது.

ஆனால், கிறிஸ்துவின் சபையும் இன்னொரு பிரிவினைக் கூட்டம் தானே என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் "இல்லை" என்பதே. இரட்சிக்கப்பட்டவர்களை, கிறிஸ்து, இந்த சபையிலேதான் சேர்த்தார். பெந்தெகொஸ்தே நாளில், சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட போது மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். வேதவாக்கியம் இவ்வாறாகச் சொல்கிறது. "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்." (அப்.2:41) என்று. மீண்டும் "... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" என்று வாசிக்கின்றோம் (அப்.2:47). ஆக, இரட்சிக்கப்படுகிற

வர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், ஒருவன் கர்த்தருடைய சபையில் அங்கமாக இராவிட்டால், அவன் இரட்சிக்கப்பட வில்லையென்ற முடிவுக்கு நாம் வரலாம். அதாவது, அவன் இரட்சிக்கப்படாததால், சபையில் சேர்க்கப்படவில்லையென்று பொருள். எபே.5:23ல், கிறிஸ்து, சரீரம் அல்லது சபைக்கு இரட்ச கர் என்று வாசிக்கிறோம். அப்படியானால், கிறிஸ்துவுக்கு எத்தனை சரீரம் இருக்கிறது? எபே.4:4ன் படி ஒன்றே ஒன்றுதான். அந்த ஒரு சரீரத்திற்கு அவர் இரட்சகராயிருக்கிறார்.

ஒருவனுடைய இரட்சிப்பு சம்பந்தமாக கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டிய பிற உண்மைகளும் உண்டு. அதாவது, ஆராதனை, கிறிஸ்தவ வாழ்க்கை, கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்ளுதல்போன்றவை. ஆனால், ஒருவன் இரட்சிக் கப்பட கண்டிப்பாக கிறிஸ்து, தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய சபையில் அங்கமாக இருக்கவேண்டும். இப்பொழுது, கீழ்க்கண்ட கேள்விகளை நான் உங்களிடம் கேட்கிறேன்.

1. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக் கிறீர்களா?
2. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்துவிட்டீர்களா?
3. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரா?

இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றுக்கோ அல்லது அதிகமானதற்கோ பதில் 'இல்லை' என்பதாக இருக்குமானால், நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்று பொருள். நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்பதை உண்மையான மனதுடன் சொல்லமுடிந்தால், இந்த மூன்று கேள்விகளுக்கும் 'ஆம்' என்ற பதிலைக் கொடுக்கக் கூடியவர்களாயிருக்கவேண்டும். இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றுக்கோ அல்லது இரண்டுக்கோ ஆம் என்று சொல்வது போதுமானதாக இருக்காது. மூன்றுக்குமே நீங்கள் ஆம் என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிராவிட்டால், நீங்கள் இரட்சிப்படையும்படியாய் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டு கிறேன். நீங்களே உங்களை இரட்சித்துக்கொள்ள முடியாதென்ப தையும் அல்லது மனிதர்களின் போதனைகளுக்கு ஒத்துப் போவ தாலும் உங்களை இரட்சித்துக் கொள்ள முடியாதென்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் என்ன சொல்கி றாரோ அதின்படி செய்வதுதான் இரட்சிப்படைவதற்கான ஒரே வழி. விசுவாசத்திற்கும், இரட்சிப்புக்கும் மாற்று எதுவும் இல்லை. ஒரு சபையில் சேர்கிறோமே என்பது குறித்தும் நீங்கள் கவலைப் பட வேண்டாம். கிறிஸ்துவின் சபையில் நீங்கள் சேரமுடியாது.

நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவர் உங்களை இரட்சித்தால். பின்பு, அவரே உங்களை, அவருடைய சபையில் சேர்ப்பார்.

நீங்கள் அப்படிச் செய்யும்போது இயேசுக்கிறிஸ்து தாம் கட்டுவேன் என்று சொன்ன சபையில் நீங்கள் அங்கமாக இருக்கிறீர்கள் (மத்.16:18) அந்த சபையானது உலகெங்கிலுமுள்ள பல பிராந்திய சபைகளால் உருவாக்கப்பட்டது. அதாவது அந்த சபையின் அங்கத்தினன் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்கள் இருக்கும் இடத்தில், இரண்டு, மூன்று அங்கத்தினர்களோ அல்லது அதிகமானவர்களோ இருந்தால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததையும் அவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள விரும்புவதையும் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். ஒருவேளை நீங்கள் இருப்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தும், உங்கள் கீழ்ப்படிதலைக் குறித்து அறியாமலிருப்பார்களானால், உங்கள் கீழ்ப்படிதலைக் குறித்து அவர்கள் அறிந்துகொள்ளும்படியான முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டும்.

ஆனால், நீங்கள் கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்திலோ அல்லது கர்த்தருடைய சபையைச் சேர்ந்த ஒன்றிரண்டு பேர் இல்லாத இடத்திலோ இருக்க நேர்ந்தால், உங்களைச் சுற்றிலுமிருக்கின்ற ஒருவரோ அல்லது அதிகமானோரோ கர்த்தருக்குக் கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு சத்தியத்தைப் போதிக்கும் முயற்சி எடுக்க வேண்டும். அதன் மூலம் நீங்கள் இருக்கும் இடத்திலே ஒரு கிறிஸ்துவின் சபையை நீங்கள் தொடங்க முடியும். தயவு செய்து சத்தியத்தோடு சமரசம் செய்து, ஏற்கனவே அங்கு உள்ள எந்தவொரு பிரிவினை சபையிலும், கூட்டத்திலும் சேர்ந்துவிட வேண்டாம். மாறாக, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியாக ஒரு சபையைத் தொடங்குவதற்கான உறுதியான முயற்சி எடுங்கள்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## யாக்கோபு நிருபத்தில் நாவு

1. ஒரு நெருப்பு (3:6)
2. அது அடங்காதது (3:8)
3. அது பொல்லாங்குள்ளது
4. அநீதி நிறைந்தது (3:6)
5. பொய் சொல்லுகிறது (3:14)
6. விஷம் நிறைந்தது (3:8)
7. பெருமை நிறைந்தது (3:5)
8 கறைப்படுத்துகிறது (3:6)

பெண்கள் பகுதி

# பொதுவான கூடுகையில் ஒரு பெண் பேசும்படி அழைக்கப்பட்டால்...?

"**பெ**ண்கள் விடுதலை" இயக்கங்கள், பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பொதுவான கூடுகையில் வெளிப்படையான தலைமைத்துவப் பங்கைச் செய்யும்படி, பெண்களுக்கு அதிகாரம் தரும்படி, எவ்வகையான வாதப் பிரதிவாதங்கள முன்வைக்கப்படுகிறது.

"**உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை....**" (1 தீமோ 2:12) என்று வேதாகமம் கூறுகிறதை உணர்ந்து கொண்டு, ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "மூப்பர்கள் அல்லது சபையின் ஆண் அங்கத்தினர்கள், பெண்களின் மேல் அதிகாரம் செலுத்த முடியும் என்பதால், ஒரு மூப்பர், ஒரு பெண்ணை ஆராத னையில் ஜெபிக்கும்படியாகவோ அல்லது போதிக்கும்படியாகவோ அழைத்தால், அது அனுமதிக்கப்படக் கூடியதா? ஏனென்றால், ஒரு பெண் இப்படிச் செய்யும் போது மூப்பரின் அதிகாரத் திற்குத்தானே கீழ்ப்படிகிறாள்?"

இது முறையானது தான் அல்லது ஒழுங்கானது தான் என்பது போல் தோன்றும். ஆண்களே, அவளை ஜெபிக்கும்படி அல்லது போதிக்கும்படி அழைக்கிறபோது, பெண்கள் எப்படி ஆண்களின் அதிகாரத்தை மீறி நடக்க முடியும்? என்று. ஆனால், ஒரு முக்கிய மான கருத்தை நாம் இங்கே மறக்கக்கூடாது: "**ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார்**" (1 கொரி11:3) பரிசுத்த ஆவியானவரின் அதிகா ரத்தினால் தான் வேதாகமம் எழுதப்பட்டது. மனிதக் கருத்துக் களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படவில்லை. சபை கூடி வரும் வேளையில், ஆண்கள் தலைமையேற்று நடத்த வேண்டும் என்று எழுதும் போது, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலால் தான் அப்படி எழுதப்பட்டதேயொழிய, இவைகள் எழுதியவருடைய கருத்துக்களோ, வார்த்தைகளோ இல்லை.

ஒரு மூப்பரோ அல்லது சபையின் ஆண் அங்கத்தினர் களோ, இருபாலரும் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தில் ஜெபிக்கும் படியோ அல்லது பிரசங்கிக்கும்படியோ ஒரு பெண்ணை அழைத் தால், அவர் வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு விரோத மாகச் செயல்படும்படி அவளைத் தூண்டுகிறார் என்று பொருள். ஒரு ஆணாக, பெண்ணின் மீது அதிகாரம் செலுத்தும்படியான பொறுப்பிலிருந்தாலும், கர்த்தருக்கு மிஞ்சிய அதிகாரம் இவர் களுக்கு ஒரு போதும் கிடையாது. இப்படிப்பட்ட காரியங்களை செய்யச் சொல்வது துணிகரமான பாவமாயிருக்கிறது. இப்படிப் பட்ட செயல், வேத வசனங்களால் பலமாகக் கண்டிக்கப்பட்டி ருக்கிறது. பொதுவாக இந்தக் கட்டளையைப் பின்பற்றுவதென்

பது தனிப்பட்ட சூழல்களில் ஆரம்பிக்கும்; இரண்டு தம்பதியர் உணவு விடுதியில் இருக்கிறார்கள், அதில் ஒரு ஆண், பெண்ணை உணவுக்காக தேவனுக்கு நன்றி சொல்லும்படியாக அழைக்கிறார் அல்லது ஒரு வீட்டில் இருபாலரும் கூடியிருக்கும் போது ஜெபத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கூடியிருக்கின்ற அச்சமயத்தில் அவர்கள் "சங்கிலி" தொடர் ஜெபத்தை நடத்த வேண்டியிருக்கிறது. அது முழுவதுமாக சபையின் ஆராதனையாக அமையவில்லை என்பதால், இதில் வேதாகமத்தின் கட்டளையை பின்பற்றுவதற்கு மாறாக, அவரவர் நினைப்பது போல் அமைத்துக் கொள்ளலாம் என்கின்ற தவறான முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

இருப்பினும், ஜெப வேளை என்பது, எப்போதும் ஆராதனை வேளைக்குரியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்தில் ஒரு ஆண், பெண்ணை எல்லோருடைய மனதையும் வழிநடத்தி தேவனுடைய சிங்காசனத்தைச் சென்றடையும் ஜெபத்தைச் செய்யும்படியாக அழைப்பது துணிகரமான பாவசெயலாக இருக்கிறது. வேதாகமத்தில் ஆண், பெண் இருபாலரும் கூடியிருக்கின்ற இடத்தில் தேவனுடைய சிங்காசனத்தில் எட்டக்கூடிய செயல்களில் பெண் வழிநடத்தும்படியாக நமக்கு வேத உதாரணங்கள் இல்லை. ஆகவே நாம் அப்படிப்பட்டதான செயல்களைச் செய்வதற்கு அதிகாரமில்லை.

இந்த கேள்விக்குப் பதில் சொல்லும்படியான, இதே போன்றதொரு வினா உபாகமப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. தீர்க்கதரிசியோ அல்லது சொப்பனக்காரனோ (அதிகாரத்தை எடுத்துக் கொள்கிற யாரும்) இஸ்ரவேலரை வழிவிலக்க முயற்சித்து, "**அற்புதத்தையும்**", ஒரு "**அடையாளத்தையும்**" நடத்தி வேறே தேவர்களைப் பின்பற்றுவோம் என்று சொன்னால், "அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக..."**நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொள்வீர்களாக, அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனக்காரனும் கொலை செய்யப் படக்கடவன்; நீங்கள் நடக்கும்படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி**".... பேசினான்" (உபா.13:2 5) என்று நாம் மோசேயின் கட்டளைக்கு உட்பட்டோ அல்லது தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாத வர்களைக் கொலை செய்யும் அதிகாரத்தை, தேவனுடைய ஜனங்களே பெற்றிருந்த அந்த நாட்களிலோ நாம் வாழவில்லை. ஆனால், தேவன் சொன்னதைக் கேட்டு, அவர் சத்தத்திற்கு கீழ்ப் படிந்து நடக்க வேண்டிய முக்கியத்துவத்தை, நாம் என்றைக்கும் குறைத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய சொந்த எண்ணத்தினால், கர்த்தரின் கட்டளையை மாற்றுவதும், அவர் ஏற்படுத்திய ஒழுங்குமுறையை மீறுவதும், ஒருவரின் மிக மோசமான குற்றமாகும். ஒரு கிறிஸ்தவன் இப்படிப்பட்ட பாவத்திற்கான குற்றத்தை சுமக்க விரும்பவே கூடாது.

**- BETTY CHOATE**

வாலிபர் பகுதி

# வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள்...

வாலிப பிராயத்திலே கர்த்தரை சேவிக்கிற ஒவ்வொரு வாலிப உள்ளங்களுக்குத் தன் வாலிப வயதில் தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் மரிக்கிற வரைக்கும் அவனுடைய ஒவ்வொரு பருவத்திலும் அவன் எப்படி வாழ்ந்தால் நித்திய ஜீவனை பெறலாம் என்று திட்டமாக போதிப்பது நம்முடைய பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இப்படி போதிக்கிற வேதாகமம் வாலிப பருவத்தை குறித்து எச்சரித்தும் அந்த பருவத்தில் எப்படி நடந்தால் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்பதையும் போதிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் உலகமானது அறிவியல் ரீதியில் நவீன யுகமாக மாறி இருப்பதால், வாலிபர்களுடைய பாவங் களும் இன்றைக்கு நவீனமாகவே மாறி இருக்கிறது. வாலிபர் களும் இன்றைக்கு தங்களை சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்து பாவ சந்தோஷங்களை மன நிறைவோடு செய்து கொண்டு இருக்கி றார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான்.

அநேக வாலிபர்கள் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராத னைக்கு ஒழுங்காக தான் செல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், மற்ற நாட்களில் கர்த்தரை நினைக்காமல் தங்கள் பாவ வாழ்க்கையை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் நீதிமான்களாக இருந்து மற்ற நாட்களில் அநீதிமான்களாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான். இதனால் தான் நீதி மொழிகள் ஆசிரியர், **நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு** (நீதி.25:17) என்று எச்சரிக்கையோடு எழுது கிறார். நாம் ஏன் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு இருக்க வேண்டும் என்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள் வோம்.

## I. *பொல்லாத உலகமாக இருக்கிறது*

இந்த உலகத்தில் தற்போது ஏற்பட்டு இருக்கிற அறிவியல் முன்னேற்றத்தால் நாம் சௌரியமாக வாழ்ந்தாலும் இந்த உலகம் இன்னமும் இருளின் அதிகாரத்தில் (கொலோ 1:13) இருக்கிறது என்று நம்முடைய வேதாகமம் போதிக்கிறது. அதோடு மாத்திரம் அல்ல, மனுஷருடைய கிரியைகளும், பொல்லாதவைகளாக இருக்கிறது (யோவா 3:19) என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எச்சரித்துள்ளார்.

ஆகையால், வாலிபர்களே இந்த உலகத்தில் பாவத்தோடும், பொல்லாங்கனாகிய பிசாசோடும் நமக்கு போராட்டங்கள் இருக்கிறது. அவனை நாம் ஜெயிக்க வேண்டும் மேலும் வசனம் "பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகிறான்" (1 பேது 5:8) என்கிறது. ஆனால், வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்கள் பொல்லாங்கனாகிய சாத்தானை ஜெயித்திருக்கிறார்கள் யோவான் ஆசிரியர் எழுதுவதை கவனியுங்கள். "வாலிபரே பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்" (1யோவா 2:13) என்கிறார். அருமையான வாலிபர்களே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்களே பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறார்கள் என்றால் நாம் ஏன் ஜெயிக்க முடியாது.

மேலும் யோவான் ஆசிரியர் வாலிபர்களை பார்த்து "வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன் (1 யோவா 2:14) என்கிறார் பாருங்கள். அவர்கள் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களால் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாற முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது, நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்றால் "நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி.23:17) அதைக் குறித்து நாம் சற்று விரிவாக பார்ப்போம்.

**II. *நமக்குள் இருக்க கூடிய பயம்***

அநேக வாலிபர்களுக்கு இருக்க கூடிய பிரச்சனை தங்களுக்குள்ளாகவே எல்லா விசயத்திலும் பயந்து கொண்டு இருப்பது தான். அதாவது, தங்களுக்குள் இருக்கக் கூடிய தாழ்வு மனப்பான்மையின் காரணமாக பயப்படுவது, தங்களுக்கள் திறமை இல்லையோ, அழகு இல்லையோ என்ற மனப்பான்மையை வைத்துக்கொண்டு பிறரிடத்தில் பேசுவதற்கே பயப்படுவார்கள் அதில் மற்றொரு வகை என்னவென்றால் தவறு அல்லது பாவம் செய்கின்றபோது அதினிமித்தமாக பயப்படுவது, ஆதாம் பாவம் செய்த போது அவன் பயந்து ஒளிந்து கொண்டான் (ஆதி.3:10) என்று வேத வசனம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து கடலில் தண்ணீர் மீது நடந்தபோது பேதுரு பார்த்து தானும் நடக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின் அனுமதியோடு கடலில் நடந்தபோது திடீரென கடலுக்குள் அமிழ்ந்து போனான். ஏன் என்னவென்று நாம் பார்க்கின்றபோது வசனம் சொல்லுகிறது. "பேதுரு பயந்து அமிழ்ந்து போனான்" (மத். 14:30) என்கிறது. ஆகையால் நமக்குள் பயம் வருகிறது என்றால் நாம் பாவம் செய்திருப்போம் அல்லது அவிசுவாசிகளாக இருப்போம்.

ஆகையால், வாலிபர்களே நமக்குள் இருக்க கூடிய பயத்தை நாம் விரட்டியடிக்க வேண்டும் "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடாமல் பலமுள்ள ஆவியை கொடுத்து இருக்கிறார்" (2 தீமோ 1:7) ஆகையால், நாம் பலமுள்ளவர்களாக இருப்போம்.

## III. *மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயம்*

நமக்கு இருக்க கூடிய மற்றொரு பிரச்சனை மற்றவர்களை பார்த்து பயப்படுவது. அதாவது மற்றவர்களின் தோற்றத்தை பார்த்தோ அல்லது அவர்களுடைய திறமையை பார்த்தோ அவர்களிடத்தில் பேசுவதற்கே பயப்படுவது. இதற்கும் காரணம் நமக்குள் இருக்க கூடிய தாழ்வு மனப்பான்மைதான்.

இப்படிப்பட்ட பயம் இருக்கக் கூடிய வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் கிறிஸ்தவ ஜீவியத்திலும் முன்னேற்றம் காண்பது என்பது முடியாத காரியம் ஆகும். அநேக வாலிபர்களுக்கு சபையில் நடத்துனர் பகுதியோ அல்லது ஜெபமோ, வேத வாசிப்பின் பகுதியோ கொடுக்கும்போது ஒன்று எங்களால் முடியாது என்பார்கள் அல்லது சபைக்கு முன்னால் பேசுகின்ற போது நடுக்கத்தோடு உளற ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம் மற்றவர்கள் மீது இருக்க கூடிய பயந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி செங்கடலுக்கு முன்பாக இருக்கும்போது "எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதை கண்டு மிகவும் பயந்தார்கள்" (யாத். 14:16) என்கிறது. இதற்கு என்ன காரணம்? கர்த்தரிடத்தில் பயம் இல்லாமல் போனதுதான் இப்படியாக அநேக உதாரணங்களை நம்முடைய வேதாகமம் சொல்லிக் கொண்டே போகிறது. நமக்கு நாமே பயப்படுவதும் பிறரிடத்தில் தேவையில்லாமல் பயப்படுவதும் கோழைத்தனமானது. யோவான் எழுதின வெளிப் படுத்தின விசேஷத்தில் பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரண மாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள் (வெளி. 21:8) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார்.

## IV. *கர்த்தர் மேல் இருக்கக் கூடிய பயம்*

வாலிபர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பயம் இருக்க வேண்டும் அது யார் மீது என்றால் நம்முடைய கர்த்தரின் மீது தான், அவருக்கு பயந்தால் தான் நம்முடைய வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும். நீதிமொழிகள் ஆசிரியர் எழுதும் போது கர்த்தருக்குப் பயப்படுதலே ஜீவ ஊற்று (நீதி.14:27) என்று எழுதுகிறார்.

மேலும் அந்த ஆசிரியர் எழுதும் போது நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறபோது நமக்குள் திட நம்பிக்கை உண்டாகிறது

(நீதி. 14:26) என்றும் எழுதுகிறார். ஆகையால், அருமையான வாலிபர்களே "நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி. 23:17) தானியேல் தீர்க்க தரிசன புஸ்தகத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்கு பயப்படாமல் அக்கினிக்கு தங்களை ஒப்புக் கொடுக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள் என்பதை நாம் மறுக்க இயலாது. (தானி. 3:18).

இந்த வாலிபர்களின் விசுவாசம் மகத்தானது ஆகும். "தேவன் எங்களை அக்கினிச் சூளையிலிருந்து விடுவிக்காமற் போனாலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை" (தானி. 3:18) என்று தைரியத்தோடு சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் அவர்கள் ராஜாவுக்கு பயப்படாமல் கர்த்தருக்கே அதிகமாக பயந்திருக்கிறார்கள். மேலும், இயேசு கிறிஸ்து சொல்வதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். "சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத். 10:28) என்று அறிவுறுத்துகிறார்.

ஆகையால், கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே உங்களுக்குள் இருக்க கூடிய பயத்தையும் மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயத்தையும் நீங்கள் முழுவதுமாக விட்டு உங்களை உண்டாக்கி இரட்சித்த நம்முடைய கர்த்தருக்கே நீங்கள் அனுதினமும் பயந்து நடங்கள், சாத்தானை ஜெயித்து பலவான்களாக இருங்கள் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

**N. பர்னபாஸ், திருப்பூர்.**

## விவேகி நீதிமொழிகளில்


1. விவேகியோ தன் நடையின் மேல் கவனமாயிருக்கிறான் (14:15)
2. இலச்சையை மூடுகிறவன் விவேகி (12:16)
3. விவேகியோ குளிர்ந்த மனமுள்ளவன் (17:27)
4. தன் வழியை சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம் (14:8)
5. விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான் (22:3)
6. கடிந்து கொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி (15:5)

சிறுவர் பகுதி

# நத்தை

எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே; உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் சிறுவர் பகுதி மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய தேவன் தன்னுடைய அகந்த ஞானத்தினாலும், தன்னுடைய வார்த்தையின் வல்லமையினாலும் நாம் காண்கின்றவைகளை படைத்தார்!


அப்படி அவரால் படைக்கப்பட்டவைகள் தங்களுடைய சிறப்பம்சங்களாலே, நாம் அவைகளை காண்கின்ற பொழுது தேவனுடைய வல்லமையையும், ஞானத்தையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. அப்படிப்பட்ட ஒரு படைப்பு தான் ஆறாம் நாளிலே தேவனாலே உண்டாக்கபட்ட நத்தை ஆகும்.



“காலை வாயில் வைத்து” என்று ஒருவேளை சில சமயங்களில் சொல்லக் கேட்டிருப்பீங்க. ஆனா வாயே காலில்தான் இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கீங்களா? ஆம், நத்தைக்கு அப்படித்தான் இருக்குது. இன்னும் சொல்லக்கேட்டீங்கனா அதோட உடம்பு எல்லாமே காலில் தான் இருக்கிறது. காலின் முன் பகுதி தான் தலை. தலையில் நான்கு கொம்பு உள்ளது. அதில் இரண்டு “கண்”, மற்ற இரண்டு “உணர்ச்சிகளை உணர்வதற்கு”. அதோட கண் எல்லா திசைகளிலும் பார்க்கும் திறனுடையது.

நத்தைகள் எல்லா அளவிலும் அதாவது, சிறியது முதல் பெரியது வரை இருக்கும். சில நத்தைகள் பூனையைவிட பெரிதாக வளருமாம். சில நத்தைகள் தண்ணீரிலும், சில நத்தைகள் நிலத்திலும், சில இவ்விரண்டிலும் வாழ்கின்றன.

நான் முன்னே சொன்னது போல தேவனுடைய படைப்புகளில் வியக்கத்தக்க காரியங்கள் அநேகம் இருக்கின்றன. இந்த நத்தையும் வியக்கும் வகையைச் சார்ந்தது. நம்மை வியக்கவைக்கும் நான்கு குணாதிசயங்களை நான் உங்களுக்கு காட்டப்போகிறேன்.



முதலில், ஒரு வீடாக தனக்கு தானே ஒரு (Shell) ஓட்டை கட்டிக் கொள்கிறது. அதை தன்பின்னேயே கடைசி வரைக்கும் சுமந்து செல்கிறது. நத்தைகள் வளரும் போது அதன் கூடும் சேர்ந்து தான் வளர்கிறது. எதற்காக இது என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். முதலாவதாக இது பிற மிருகங்களிடம் இருந்து பாதுகாப்பு தருகிறது. இரண்டாவதாக தன்னுடைய உடம்பை ஈரமாக வைக்க உதவுகிறது. மிகுந்த வறண்ட சூழலில் அது தன் கூட்டிற்குள்ளேயே இருந்து விடுகிறது. மழைகாலத்தில் மட்டுமே உணவு தேடுவதற்கு வெளியே வருகிறது.

*இரண்டாவதாக,* நிலத்தில் வாழ்கின்ற நத்தைகள் சில சமயங்களில் மிக ஆழமான குழியை உண்டாக்கி அதினுள் சென்று குளிர் காலங்களில் தூங்கி விட்டு மழைகாலம் வந்தவுடன் வெளியே வருகிறது. பாருங்கள்! எவ்வளவு சாமார்த்தியமாகவும் அறிவாகவும் இவைகள் வேலை செய்கின்றன என்று.

*மூன்றாவதாக,* நத்தைகள் தங்கள் வழியை தாங்களே அமைத்துக் கொள்கின்றன. அவைகளின் உடம்பு எப்போதும் ஈரப்பதத்தோடு இருப்பதால் சுலபமாக எதுவேண்டுமானாலும் ஒட்டிக்கொள்ளும். அதனால் தான், அது தானே (Slime) சிலைம் என்ற ஒன்றை சுரந்து அதன் மீது செல்கிறது.

*நான்காவதாக,* அவைகளுக்கு பற்கள் இல்லை. ஆனாலும் தங்கள் நாக்கை (Tongue) வைத்து தங்கள் உணவை சுரண்டி சுரண்டி சாப்பிடுகின்றன.

யார் இவைகளுக்கு கூ(வீ)டு கட்டவும், மழைகாலத்தில் தூங்கவும் கற்றுக்கொடுத்தது. இதை பரிணாமத்தால் விளக்க முடியாது! கண்டிப்பாக முடியாது.

நாம் இவைகளையும் இவைகளின் செயலையும் பார்க்கும் போது, நமது தேவனின் வல்லமையும், ஞானமும், பராக்கிரமமும் நமக்கு பளிச்செனத் தெரியவரும்.

நம்முடைய தேவன் எப்படிப்பட்டவரென்று பாருங்கள்! அவருக்கு பயந்து நடக்க வேண்டியது எவ்வளவு அவசியம்? என்ன? அவருக்கு பயந்து பிரியமாக நடக்க ஆயத்தமா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!.

**ஏபில் R. நாயகம்**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 3. பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம்

### I. தேவனுடைய அழைப்பு

தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு தேவனுடைய அழைப்பு என்பது மிகவும் அவசியமானதாகும். தேவன் அழைக்காத ஊழியம் என்பது தோல்வியில்தான் முடியும். முதல் நூற்றாண்டில் பவுலை இயேசு கிறிஸ்து தமஸ்குவுக்குப் போகும் வழியில் சந்தித்தார். அப்போது சவுல் மனந்திரும்பி ஜெபம் செய்து கொண்டிருந்த சமயத்தில் அனனியா என்னும் பக்திமானிடம் இயேசு பவுலைக் குறித்து அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்றார். (அப்9:15)

தேவனுடைய அழைப்பு அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அனனியாவின் மூலமாகத் தெரிந்தது. இயேசு கிறிஸ்து பவுலிடம் நேரடியாகப் பேசும் பொழுது நேரடியாக அழைக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். இதே நிகழ்ச்சியை பவுல் ஆலோசனை சங்கத்தார் மற்றும் அனைத்து யூதர்களிடம் பகிரங்கமாகச் சொல்லும் பொழுது ஊழியத்தின் அழைப்பை அனனியாவின் மூலமாக தேவன் அழைத்ததைக் கூறுகிறார். (அப் 22 : 12,15)

மேலும் அப் 13:1,2-ல் அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையில் பவுலும், பர்னபாவும் மற்றும் சபையாரும் சேர்ந்து ஆராதனை செய்து கொண்டிருந்தபோது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (இந்த இடத்திலும் பவுலை தேவன் நேரடியாக அழைக்காமல் சபையின் மூலமாக அழைக்கிறார்)

தரிசனங்கள் கொடுக்கின்ற முதல் நூற்றாண்டிலே பவுலை ஊழியத்திற்கென்று நேரடியாக அழைக்காமல் அனனியாவின் மூலமாக அழைத்தார் தேவன். இந்நூற்றாண்டிலே அற்புத வரங்கள் தரிசனங்கள் எல்லாம் ஒழிந்து போயிற்று (1கொரி 13:8-10) அப்படியிருக்கும்போது இன்று தேவன் யாரையும் நேரடியாக அழைப்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் இன்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாகத்தான் அழைக்கிறார். (2.தெச 2:14) நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். (II கொரி5:6) மேலும் பேதுரு எழுதும்

போது அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறீர்கள் என்றார். (1.பேதுரு 1:8).

அனனியாவின் மூலமாக தேவன் அழைத்ததை பவுல் தேவனுடைய அழைப்பாகவே எண்ணினார். நாமும் சுவிசேஷத்தின் மூலமாக அழைக்கும் அழைப்பை தேவனுடைய அழைப்பாகவே எண்ண வேண்டும். இப்படிப்பட்ட அழைப்பின் ஊழியம் தான் நிலைத்திருக்கும். பணத்திற்காகவும் பதவிக்காகவும் (ஊழியர் என்ற பதவிக்காக) வீண் பெருமைக்காகவும் செய்யப்படுகின்ற ஊழியம் நிலைத்திருக்காது. ஏனென்றால், அது கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே அழைப்புப் பெறவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சிந்தையை அணிந்து கொண்டு, கிறிஸ்துவைப் போல மனத்தாழ்மையையும், எளிமையான வாழ்க்கையையும் விரும்புகிறவர்களாகவும், கிறிஸ்துவைப்போல தன்னைத்தானே தியாகமாக ஊழியத்தில் அர்ப்பணித்துக் கொள்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். இதுதான் தேவனுடைய அழைப்பாகும்.

நியாயப்பிரமாணத்தில் தேவனுக்கென்று ஆசாரிய ஊழியம் செய்வதற்கு லேவிக் கோத்திரத்திலிருந்தே அழைக்கப்பட்டிருந்தனர். எனவேதான், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத்தானாய் ஏற்படுகிறதில்லை (எபி 5:4)

அதாவது, அன்றைய நாளில் ஆசாரிய ஊழியத்திற்கென்று லேவிக் கோத்திரத்திலிருந்த ஆரோனும் அவனுடைய வம்சத்தாரும் மட்டுமே தேவனால் அழைக்கப்பட்டு அந்த கனமான ஆசாரிய ஊழியத்தைச் செய்தனர். இன்று அப்படியல்ல கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாரெல்லாம் கீழ்படிகிறார்களோ அவர்கள் எல்லாருமே ஆசாரியர்களாக இருக்கிறார்கள். (1.பேதுரு 2:9) எல்லாரும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யும் படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஊழியம் என்பது மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்லுவது மட்டுமே ஊழியம் என்று நினைக்கலாகாது! ஊழியம் என்பது சபை கூடிவருதலை விடாமல் வாரந்தோறும் ஆராதிப்பது ஊழியத்தின் ஒரு பகுதியாகும். மேலும் ஊழியத்திற்கென்று உதவிகளைச் செய்வதும் ஊழியமாகும் (ரோமர் 10:15) மற்றவர்களை ஆராதனைக்கும், சுவிசேஷக் கூட்டங்களுக்கும் அழைத்து வருவதும் ஊழியமாகும். இப்படி அநேக ஊழியங்கள் சபையில் உண்டு என்று வேதம் கூறுகிறது. எல்லா ஊழியத்திற்கும் தேவனுடைய அழைப்பு ஒரே மாதிரியாக உள்ளது. அந்த ஒரே அழைப்பு சுவிசேஷத்தினாலே அழைக்கப்படுவதாகும்.

(எபே 4 : 4)

## 2. தேவனால் தெரிந்து கொண்ட பாத்திரம்:

சுவிசேஷ ஊழியத்தை எல்லாராலும் உடனடியாகச் செய்ய முடியாது! தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவராலே மட்டுமே ஊழியத்தைச் செய்ய முடியும். பவுலைக் குறித்து இயேசு கூறும் போது என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்றார் (அப் 9 : 15) பவுலைக் குறித்து இப்படிச் சொல்லுவதற்கு பவுலிடத்தில் காணப்பட்ட ஆவிக்குரிய தகுதிகள் காணப்பட்டன! அது என்னவென்றால், பவுல் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவுடன் சீரியாவிலுள்ள அந்தியோகிய பட்டணத்திலுள்ள சபையிலே அங்கத்தினராக இருந்து கொண்டு, தீர்க்கதரிசியாகவும், போதகராகவும் இருந்து தொடர்ந்து தேவனுக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருந்தார். (அப் 13:1,2) இங்கே பவுல் ஆவிக்குரிய சில தகுதிகளை பெற்றிருந்தார். அந்த தகுதிகள் வருமாறு:

1. பவுல் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டார்.
2. வேதத்தை படித்துக் கொண்டிருந்தார்.
3. வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனை செய்து கொண்டிருந்தார்.
4. தீர்க்கதரிசியாகவும், போதகராகவும் செயல்பட்டார்.
5. உபவாச ஜெபத்தில் தரித்திருந்தார்.

இன்று சிலர் நேற்றுவரை துன்மார்க்கமாக நடந்து கொண்டு இன்று திடீர் ஊழியராக மாறிவருகின்றனர். இது எப்படி என்று அவர்களைக் கேட்டால் அவர்கள் நேற்றுவரை பவுலைப்போல துன்மார்க்கனாக இருந்தேன். இன்று பவுலை எப்படி திடீரென்று கர்த்தர் அழைத்தாரோ அதுபோல கர்த்தர் என்னை அழைத்தார் நான் ஊழியக்காரனானேன் என்று கூறுகிறார்கள். நண்பர்களே, பவுல் துன்மார்க்கனாக, குடிகாரனாக இல்லை அவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுமுன் நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவர், பக்திமான். (பிலி 3:6) இப்படி இருக்கிறபடியால் பவுலை உதாரணமாகச் சொல்லுவது முற்றிலும் தவறானதாகும். பவுல் திடீர் ஊழியராக மாறவில்லை நீண்ட காலமாக அந்தியோகியாவிலுள்ள சபையில் முக்கியமானவராக செயல்பட்டவர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பவுல் தேவனால் தெரிந்து கொண்ட பாத்திரமாக இருக்க ஆவிக்குரிய தகுதிகளைப் பெற்றிருந்தார். இன்று பவுலை உதாரணமாகச் சொல்லுகிறவர்களுக்கு பவுலைப் போன்ற ஆவிக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்கிறார்களா! ஒரு விசயத்திலும் குற்றம் சாட்டப்ப டாதவராக இருக்கின்றார்களா? ஆவிக்குரிய தகுதிகளில்லாமல் அநேக குற்றங்களைச் செய்பவர்கள் பவுலை உதாரணம் கூறுவது மிகவும் கடிந்து கொள்ளப்படக்கூடியவர்

களாக உள்ளனர். இப்படிப்பட்டவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**3. கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் வரும் பாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

சவுல் தமஸ்குவுக்கு போகும் வழியில் இயேசு அவனை சந்தித்தபோது அவனை மாற்றினார். அவனைக் குறித்து அனனி யாவிடம் கூறும்பொழுது அவன் என்னுடைய நாமத்தி னிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார் (அப் 9:16)

கர்த்தருடைய ஊழியம் என்பது கார், பங்களா என்ற சொகு சான வாழ்க்கையைக் கொடுப்பதல்ல! கிறிஸ்துவின் நாமத்தினி மித்தம் வரும் பாடுகளை ஏற்றுக்கொள்வதே ஊழியமாகும்! அதைத்தான் இயேசு கிறிஸ்து பவுலிடம் காண்பித்தார். பவுல் கிறிஸ்துவினிமித்தமாக மரிப்பதற்கும் ஆயத்தமாயிருப்பதாகக் கூறினார். (அப் 21:13) இப்படிப்பட்ட ஆயத்தத்தோடு தான் பவுல் தனது சுவிசேஷப் பிரயாணத்தை மேற்கொண்டார்.

அருமையானவர்களே, ஊழியம் என்பது பயந்து கொண்டு செய்வதல்ல! தைரியமாகச் செய்யப்படவேண்டும். ஒரு ஊழியக் காரர் ஊழியத்தினிமித்தமாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும். அதாவது, அவமானங்கள், துன்பங்கள், பாடுகள், நஷ்டங்கள் இவைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள தயார்நிலையில் தான் ஊழியம் செய்ய வேண் டும். இதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவும் நமக் காக பாடுபட்டு தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும் படி மாதிரியை பின் வைத்துப் போனார். (1.பேதுரு 2:21) ஊழி யத்தின் அடிச்சுவடுகளெல்லாம் பாடுகள், அவமானங்களாகும். பவுல் நமக்காக இப்படிக் கூறுகிறார். "நான் கிறிஸ்துவைப் பின்பற்று கிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர் களாயிருங்கள்". (1. கொரி 11:1).

**(தொடரும்)**

## கர்த்தருடைய வார்த்தையின் நன்மைகள் சங்கீதம் 119லிருந்து

1. நமது வழிகளை சுத்தப்படுத்துகிறது (9,10)
2. பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது (11,10)
3. ஊக்கப்படுத்துகிறது (14,16,25)
4. தேவ பயத்தை தருகிறது (38)
5. நம்பிக்கை அளிக்கிறது (43,74,81)
6. நன்றியுணர்வை தருகிறது (62)
7. ஞானத்தைக் கொடுக்கிறது (98,100,104)
8. வழி நடத்துகிறது (24,105,130)

# தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட என்ற இவ்வசனத்தைக் கவனியுங்கள். "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30). இவ்வசனம் எப்படி இன்றைக்கு எனக்கும், உங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது?

இந்த வசனம் என்ன சொல்லுகிறதென்பதைத் தெரிந்து கொள்ள, என்னோடு சேர்ந்து இரண்டு முக்கிய கருத்துக்களைப் படியுங்கள்.

முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கிற முறை, ஏதோ விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை. மாறாக, புரிந்து கொள்ளுவதற்கு மிக எளிமையான முறையிலே தான் சொல்லப்பட்டிருக்கிறது!

இரண்டாவது, நீங்களும், நானும் பரிசுத்த ஆவியானவரை எவ்வழிகளில் துக்கப்படுத்துகிறோம் என்பதை படிப்பதற்காக அழைக்கிறேன். இதைப் படிப்பதன் நோக்கம், பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவதை தவிர்ப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் தான்.

இப்பொழுது, இந்த இரண்டையும் விரிவாகப் பார்ப்போம்.

**முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் முறை விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை.**

1. கொரி. 13; 8 10 வசனப் பகுதியில், தேவன் ஒன்றை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அற்புதங்களை ஓய்ந்து போகவும், ஒழிந்து போகவும் பண்ணுவேன் என்று சொல்லியுள்ளார். அத்தோடு, எப்போது அப்படி ஓய்ந்து, ஒழிந்து போகப் பண்ணுவேன் என்றும் சொல்லியுள்ளார். அது, முதல் நூற்றாண்டில் "நிறைவாகிய" புதிய ஏற்பாடு முழுமையான அளவில் வெளியாகும் போது நடக்கும் என்று.

அதைத்தான் தேவன் அப்படியே நிறைவேற்றினார். அதாவது, முதல் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடு முழுமையடைந்தவுடன், அற்புதத்தை முடித்து வைத்தார். ஆகவே, இந்த வசனப்பகுதியோ அல்லது புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியோ, இன்றைக்கு அற்புதம் இருக்கிறது என்பது பற்றி எதுவும் குறிப்பிடுவதுமில்லை.

எபே. 4 : 30 வசனமானது, விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடுவதில்லையென்றால், வேறு எதைக் குறிப்பிடுகிறது? இதன் பொருள்

மிகவும் எளிமையானது. நானும் நீங்களும் பரிசுத்த ஆவியான வரை துக்கப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது! தேவன், நாம் அப்படி செய்வதை விரும்புவதில்லை!

இந்த வசனப் பகுதி, பரிசுத்த ஆவி ஒரு *நபர்* என்றும், அவரை துக்கப்படுத்த முடியும் என்று சொல்லுகிறது. மத உலகில் சிலரால் போதிக்கப்படுவது போல, அவர் ஒரு ஆவி சக்தி அல்ல.

வேதாகமத்தின் பிற பகுதிகள், பரிசுத்த ஆவியானவர், தேவத்துவத்தின் ஒருவர் என்றும், தெய்வீகம் உடையவர் என்றும் தெளிவாக போதிக்கிறது. (மத் 28;19 ல்) இயேசுவானவர், தன்னைப் பின்பற்றினவர்களுக்கு, நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார். பிதாவையும், குமாரனையும் போல இவரும் தெய்வீகத் தன்மையுடையவராக இருக்கிறார்.

2. கொரி. 13;14 ல், தேவன் அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை மீண்டும் பார்க்கிறோம். இது அவருடைய தெய்வீகத்தை குறிப்பதாக உள்ளது.

ஆகையால், நாம் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் போது, நாம் தேவனை துக்கப்படுத்துகிறோம்.

வேதாகமத்தின் பிற பகுதிகளில், தேவனைத் துக்கப்படுத்து வது குறித்து விதவிதமாக சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கி றோம். உதாரணமாக, ஆதி.6;5,6 ல், மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார் என்றுள்ளது. அன்பான நமது தேவன் மீது, அவர்களின் துன்மார்க்கச் செயல் என்ன பாதிப்பை ஏற்படுத்தியது? அவர் தமது இருதயத்திலே *விசனப்பட்டார்.*

ஏசாயா 43; 24 ல், தன்னுடைய தீர்க்கனாகிய ஏசாயாவைக் கொண்டு தேவன் தன்னுடைய, கலக குணமுள்ள ஜனங்களிடத் திலே பேசினார். தேவன், "உன் பாவங்களினிநிமித்தம் என்னைச் *சங்கடப்படுத்தி,* உன் அக்கிரமங்களினால் என்னை *வருத்தப்ப டுத்தினாய்*" என்று கூறுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களின் மீதான, தேவனுடைய அன்பான கரிசனை ஏசாயா 63;9 ல் அழகாக விளக்கப்பட்டுள்ளது. வசனம் 10 ல், தேவன் அவர்களுக்கு நல்லவராக இருந்தும், அவர்கள் கலகம் பண்ணினார்கள் என்று பார்க்கிறோம். அவர்கள் அப்படிச் செய்ததினாலேயே, *பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்.*

சங். 78; 40 சொல்லும் வல்லமையான வார்த்தைகளைக் கவனியுங்கள்.

தேவனுடைய ஜனங்கள் வனாந்திரத்திலே அவருக்கு **கோபம் மூட்டினார்கள்.** அவாந்தர வெளியிலே அவரை **விசனப்படுத்தினார்கள்.** இஸ்ரவேலர்கள் எப்படி வனாந்திரத்திலேயும், அவாந்தர வெளியிலும் அவருக்குக் கோபம் மூட்டி, விசனப்படுத்தினார்கள்? தேவனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள். விக்கிரக வணக்கத்திற்கு உட்பட்டார்கள். தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனார்கள். மற்றும், ஒழுக்க ரீதியாக பாவம் செய்து விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள்.

இன்னும் சங்கீதம் 95:7, 11 ல், தேவனுடைய ஜனங்களின் கலகம் பற்றியும், அதற்காக தேவன் என்ன செய்தார் என்பது பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. தேவன் அவர்களை பற்றி இவ்விதம் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள் என்றும், சோதித்தார்கள் என்றும், கலகம் செய்தார்கள் என்றும், வழுவிப் போகிற இருதயமுள்ளவர்களென்றும், தேவனுடைய வழிகளை அறியாதவர்களென்றும் கூறியுள்ளார்.

அவர்களைக் குறித்தான தேவனுடைய நிலையை தயவு செய்து கவனியுங்கள். தேவன் அந்த சந்ததியினிமித்தம் விசனப்பட்டார். துக்கப்பட்டார். அத்தோடு, தன்னுடைய கோபத்திலே, “என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று” ஆணையிட்டார்.

தேவன் இன்னுமொரு செய்தியை, எசேக்கியேல் தீர்க்கனைக் கொண்டு தனது ஜனங்களுக்கு அனுப்பினார் எசே. 16:43 ல், அவர்கள் தனக்கு கோபம் மூட்டினதை தேவன் சொல்லுகிறார். அப்படிச் செய்ததினால், “இதோ, நான் உன் வழியின் பலனை உன் தலையின்மேல் சுமரப் பண்ணுவேன்” என்று தேவன் சொன்னார். வேறு வகையாக சொல்வதென்றால், நன்றியற்று, கீழ்ப்படியாமையினால் அவருக்கு கோபம் மூட்டி னதற்கான விலையை அவர்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்.

மல்கியா தீர்க்கதரிசியின் நூல் 2 ம் அதிகாரம் 16,17 ஆகிய வசனங்களில், தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தைகள் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே, மனைவியைத் தள்ளி விடுதலை வெறுக்கிறேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஏனெனில், இப்படிப்பட்டவன், கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடி துரோகம் பண்ணுகிறான். இந்தப் பாவத்தைப் பொறுத்தளவில் ஜனங்கள் குற்றமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் அதுமாத்திரமல்ல!!.

பொல்லாப்பைச் செய்கிறவன் எவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்றும் சொன்னார்கள். மேலுமாக, தேவனுடைய நீதியைக் குறித்து கேள்வியெழுப்பினார்கள்.

தேவனுடைய பதில் அதற்கு என்னவாக இருந்தது? அவர்களுடைய வார்த்தைகளினாலும் செயல்களினாலும் தேவனை வருத்தமடையச் செய்தார்.

அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் சனகரீப் சங்கத்திற்கு முன்பாக ஸ்தேவனின் எழுச்சியான பேச்சை தேவன் எழுதிக் கொடுத்துள்ளார். வசனங்கள் 51 53 ல், தைரியம் கொண்ட ஸ்தேவான், நீங்களும், உங்கள் பிதாக்களும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்றீர்கள் என்று குற்றப்படுத்தினான். எப்படி அவர்கள் அதைச் செய்தார்கள்?

அவர்கள், செவிகளிலும், இருதயத்திலும் விருத்தசேதன மில்லாதவர்களாயிருந்து, வணங்காக் கழுத்துள்ளவர்களா யிருந்தார்கள். இதையே வேறுவிதமாகச் சொல்வதாக இருந்தால், அவர்கள் கடினமுள்ளவர்களாயிருந்து, தேவன் சொல்வதைக் கேட்க மறுப்பவர்களாயிருந்தார்கள். தேவனுடைய தீர்க்கதரிசி களை அவர்கள் துன்பப்படுத்தினார்கள். நீதிபரருடைய அதாவது, மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்கள்.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவாகிய இயேசுவை, ஸ்தேவானின் நாட்களில் வாழ்ந்தவர்கள் காட்டிக் கொடுத்து கொலை செய்தார்கள். பழைய பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமற் போனார்கள்.

இவ்வகையில், இந்த ஜனங்கள் பரிசுத்த ஆவியை எதிர்த்தார்கள். தேவன், எபிரேயர், நிருபத்தின் ஆசிரியரைக் கொண்டு, வனாந்திரத்தில்லி இஸ்ரவேலர்களின் நிலையைச் சொல்லியுள்ளார். அவர்கள் பாவம் செய்ததாக தேவன் சொல்லி யுள்ளார். அவர்கள் கீழ்ப்படியவில்லை.

தேவனுடைய ஜனங்கள் பாவம் செய்து, கீழ்ப்படியாமல் போனபோது, தேவன் என்ன செய்தார் என்பதை நாம கற்றுக் கொள்வது அவசியம். நாற்பது வருடங்களாக தேவன் அவர்கள் மீது கோபமாயிருந்தார். அவர்கள் பிணங்கள் வனாந்திரத்திலே விழுந்து போயிற்று. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்ப தில்லையென்று, அவர் ஆணையிட்டார்!

இப்பொழுது, மேற்கண்ட வசனப்பகுதியில் நாம் பார்த்த தை தொகுத்து கவனிப்போம். மனிதனுடைய பாவச் செயலினி மித்தம், தேவன் கீழ்க்கண்ட வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளார். துக்கப்பட்டிருக்கிறார் (எபே. 4;30 ல் நாம் பார்த்தபடி) தேவன் பாரப்பட்டிருக்கிறார். வருத்தப்பட்டிருக்கிறார். கோபம் மூட்டப் பட்டிருக்கிறார். கோபத்தால் நிறைந்திருக்கிறார். எதிர்த்து நின்றிருக்கிறார். கோபப்பட்டிருக்கிறார். சில செயல்களை வெறுத்திருக்கிறார்.

தேவனை இந்த விதமாகப் பாதிப்படையச் செய்த மனிதனின் செயல்களைக் கவனியுங்கள். துன்மார்க்கம், பொல்லாப்பு, பாவங்கள் அல்லது அக்கிரமம், கலகம், முணுமுணுப்பு, விக்கிரக ஆராத னை, கீழ்ப்படியாமை, ஒழுக்கக் கேடு, கடின இருதயம், தேவனை பரீட்சை பார்த்தல், இருதயங் களில் விலகிப் போகுதல், தேவனுடைய வழிகளை அறிய மறுத்தல், அருவருப்புகளைச் செய்தல். இளவயதின் நாட்களை நினையாதிருத்தல், வணங்காக் கழுத்து, இருதயத்திலும், செவி யிலும் விருத்தசேதனமில்லாமை, தீர்க்கதரி சிகளை துன்புறுத்திக் கொலை செய்தல், இயேசுவைக் காட்டிக் கொடுத்து, கொலை செய்தல், நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளாமை, மனைவி யைத் தள்ளிவிடுதல், துரோகம் பண்ணுதல், பொல்லாப்பை நல்லது என்று சொல்லுதல் மற்றும் தேவ நீதியைக் கேள்வி கேட்டல்.

தேவன் பாதிப்படைந்ததோடு, அந்தச் செயல்களினி மித்தம், தேவன் என்ன செய்தார் என்று சொல்லுகிறார் என்பதைத் தயவாய் கவனியுங்கள். அவர்களுக்கு எதிராக அவர் ஒரு விரோதியானார்; அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார்; தன்னுடைய இளைப்பாறு தலில் பிரவேசிப்பதில்லையென்று, தன்னுடைய கோபத்திலே சொன்னார். அவர்கள் செய்கையின் பலனை அவர்கள் தலையின் மேல் திருப்பினார். அதாவது, எதை விதைத்தார்களோ அதை அவர்கள் கண்டிப்பாக அறுக்கும்படி பார்த்துக் கொண்டார்.

இப்பொழுது, அநேக வேத பகுதிகளைக் கொண்டு என்ன படித்தோமோ அவைகளை (எபே. 4;20) உடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதீர்கள் என்று தேவன் கட்டளையிடும்பொழுது. தேவன், நாம் பாவ வாழ்க்கை யில் ஈடுபடக்கூடாது என்றே சொல்லுகிறார். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நாம் வாழக்கூடாது. பாவத்திலே வாழ்ந்து, தேவனுக்கு எதிராக கலகம் செய்வது, தேவனை துக்கப்படுத்து கிறது. அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வில்லையென்றால், தேவன் நம்மை கடுமையாக தண்டிப்பார்.

EZSR

CHARLIE DI PALMA

## பிரசங்கியுங்கள்

| | |
|---|---|
| திருவசனத்தை பிரசங்கியுங்கள் | உ தீமோத் 4:உ |
| சத்தியத்தைப் பிரசங்கியுங்கள் | யோவான் 8:3உ |
| அன்புடன் சத்தியத்தைப் பிரசங்கியுங்கள் | எபேசியர் 4:15 |
| உலகம் முழுவதுக்கும் பிரசங்கியுங்கள் | மத்தேயு உ8:19,உ0 |
| திருவசனத்தோடு ஒன்றும் கூட்டாமல் பிரசங்கியுங்கள் | வெளி உஉ:18 |
| சுய மகிமையைத்தேடாமல் பிரசங்கியுங்கள் | 1 கொரி 9:16 |

# இயேசுவைக் காண விரும்புகிறோம்

யோவான் சுவிசேஷத்தில் 12:10-21 வசனங்களில் இருந்து செய்தியை படிக்க இருக்கிறோம். இந்த அதிகாரம் மிகவும் அருமையான விஷயங்களை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. 1. விலை மதிப்பான தைலத்தை ஆண்டவரின் சிரசில் ஊற்றிய பெண் மணி 2. மரித்த பின் 4 நாட்களுக்குப் பின்பு உயிர்தெழுந்த லாசரு 3. திரளான ஜனங்கள் ஆண்டவருக்கு ஒரு ராஜாவிற்கு செய்யும் வண்ணமாக குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு ஓசன்னா என்றும் இஸ்ரவேலின் ராஜா என்று பாடியது. ஒரு கழுதைக் குட்டியின் மீது ஆண்டவரை அமர்த்தி அழைத்து வந்தது என்று இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

பஸ்கா பண்டிகையின் சமயமாய் இருந்தது. யாத் 12:27 பஸ்கா என்பது கடந்து வந்ததை, மீட்கப்பட்டதை நினைவுகூரும் பண்டிகை. இன்றைக்கு நமக்கு பஸ்கா பண்டிகை (1கொரி 5:7) கிறிஸ்துவின் நினைவாக வாரந்தோறும் அப்பம், திராட்சை ரசத்தில் பங்கு பெறுவது தான். நாம் பாவத்திலிருந்து விடுதலை யானதின் அடையாளம்.

*2ராஜா 9:13*ல் யெகூவை ராஜாவாக்கின பொழுது ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வீதியில் விரித்து வரவேற்றார்கள் *1 ராஜா 1:33*ல் சாலமோன் ராஜாவாக்கப்பட்டபோது கோவேறு கழுதை யில் ஏற்றி அழைத்து வரப்பட்டார்.

சகரியா 9:9 நம் ஆண்டவரின் வாழ்வில் நடைபெறப் போகும் தீர்க்கதரிசனம். அதுதான் யோவா 12ல் 12-16 வசனங் களில் நிறைவேறியதைக் காண்கிறோம்.

பண்டிகைக்கு வந்த கிரேக்கர்களில் சிலர் பெத்சாயிதா ஊரா னாகிய பிலிப்புவினிடத்தில் வந்து இயேசுவை காண விரும்பு கிறோம் என்றார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களிடம் கேட்டார் கள் அன்றைக்கு நம் ஆண்டவர் மாம்ச சரீரத்தில் இருந்தார். அவர்கள் தேவ குமாரனைக் கண்களால் கண்டு களிகூர்ந்திருப் பார்கள். தமிழக முதல்வரோடு சிறிது நேரம் நாம் முகமுகமாய் சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிடைத்தால் நம் வாழ்வில் மகிழ்ச்சி யான அனுபவமாய் இருக்கும். அந்த நாளையும் நேரத்தையும் டைரியில் எழுதுவோம், புகைப்படம் எடுத்து பலரிடம் காண் பித்து பாருங்கள் நான் நாட்டையே ஆளும் ஒருவரோடு அமர்ந் திருக்கிறேன் என்று சொல்லி, சொல்லி சந்தோஷப்படுவோம்.

**1. உயரமான கட்டிடங்களை கட்டி நாம் கிறிஸ்தவர்கள் என்பதை வெளிப்படுத்தலாமா?**

தேவனை ஆராதனை செய்ய ஒரு கூடுமிடத்தை கட்டுபவர் களுக்கு நாம் எதிரிகளல்ல. ஆனால், ஒரு உயரமான மற்றும் விலையுர்ந்த வேலைப்பாடுள்ள கட்டிடத்தை கட்டியதை மட்டுமே கிறிஸ்தவர்களுக்குரிய அடையாளமாகக் கொள்ள லாமா? வேதம் இதைக் குறித்து என்ன பேசுகிறது?. 2சாமு 7:2-6 தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென விரும்பினார். தேவன் ஒருபோதும் தனக்கு ஆலயம் வேண்டுமெனக் கேட்டதில்லை. சாலமோன் தேவாலயத்தை ஏழு ஆண்டுகளில் (1ராஜா 6:38) சிறப்பானதாகக் கட்டினார். அது யூதர்களின் பெருமைக்குரியதாய் இருந்தது.

*மத் 24:1-2* இயேசு அவர்களை நோக்கி.... ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்றார் (அப்போஸ் 17:24) உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப் பட்ட கோயில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. கட்டி டங் கள் தான் நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்கான அடையாளம் என்றால் கி.பி. 70ல் எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட தேவன் அனுமதித்தது ஏன்? அப்படியானால் நாம் கிறிஸ்தவர்கள் என்பதை எப்படி காண்பிப்பது?. நீங்களே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள்.

யோவா 14:23ல் சொல்கிறபடியாக தேவனிடம் அன்பு கூறுகி றவர்கள், அவரது வசனங்களைக் கைக்கொள்வார்கள் அப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி அவர்களுக்குள் வாசம் பண்ணுவார்கள். அப்பொழுது தேவனுடைய நாமம் அதிக மாய் மகிமைப்படும். அப்பொழுது நம் மூலமாக இந்த உலகம் கிறிஸ்துவை பார்க்கும்.

**2. விசேஷித்த உடைகள் மூலம் கிறிஸ்துவை வெளிப்படுத்தலாமா?**

கிறிஸ்தவர்களுக்குக்கென்று விசேஷித்த உடைகள் ஏதும் வேதத்தில் சொல்லப்படவில்லை *(மத். 23:5)* தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி தங்கள் வஸ்திர தொங்கலை பெரிதாக்கியவர்களை ஆண்டவர் கடிந்து கொள்வதைப் பார்க்கிறோம். நமது தேவன் (சங்கீதம் 104:2) ஒளியை வஸ்திரமாக தரித்துக் கொண்டிருக்கிறார். (மத்தேயு 17:1-5) மறுரூபமலையில் நமதாண்டவரின் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மை யாயிருந்தது எனப் பார்க்கிறோம்.

இந்த பூமியில் ஒரு கிறிஸ்தவர் கந்தலான உடை உடுத்து கிறாரா? அல்லது விலையுயர்ந்த ஆடை உடுத்துகிறாரா என்ப தல்ல காரியம். வெளி *19:8* ஆட்டுக்குட்டியானவரின் மணவாட் டிக்கு சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் கொடுக்கப் பட்டது அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதிகளே. நீதி என்பது என்ன?. சங்கீதம் 119:172 உமது கற்பனைகள் எல்லாம் நீதியுள்ளவைகள்.

ஆம், பிரியமானவர்களே உயரமான கட்டிடங்களோ அல்லது வித்தியாசமான உடைகளோ அல்லது புறஜாதியாரைப் போல கொண்டாடுகின்ற விழாக்களோ (கொலோ 2:19-23) நம்மை கிறிஸ்த வர்கள் என்று காண்பிக்காது.


யோவா 17:20-23 கிறிஸ்து தம்மை விசுவாசிப்பவர்கள் ஒற்று மையுடன் இருக்க ஜெபித்தார். 2) 1 கொரி 1:10-12 பல பெயர்களில் நாம் பிரிந்து இருப்பதை வேதம் கண்டிக்கிறது. 3) 2 கொரி 13:5, கொலோ 1:27 கிறிஸ்து நமக்குள் வாசம் செய்கி றார். ஆதலால், கிறிஸ்தவத்தை வாய்மொழியாகப் பேசுவதை விட சத்தியத்தின்படி (1யோவா 2:6) அதாவது, கிறிஸ்துவைப் போல வாழ்வதினால் நமக்குள் கிறிஸ்து இருக்கிறார் என்பதை காண்பிப்போம். அப்பொழுது தான் நம் வெளிச்சம் பிரகாசிக்கும் (மத் 5:13-16) தேவன் மகிமைப்படுவார்.


கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருக்கடவது. ஆமென்.

**S. பிச்சைமுத்து**, தூத்துக்குடி.

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/ 26 /2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

திருமறை ஆசான்
இதழ் ஆசிரியரின்
திருமறை தியானம்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.